1984 மார்ச் 9]

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, காற்றின் அலைகள் மூலமாக மின் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செய்கிறபோது மின் உற்பத்தி செய்து பம்பு செட்டுகளை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது நேரடியாக பம்புசெட்டுகளை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம்.

232 (*வினா 17628) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாத்தனூர் அணையில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் குறித்து தமிழக மின்வாரியம் விரிவான திட்ட மதிப்பீடு தயாரித்து வருகிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையில் ஒரு சிறு நீர் மின் திட்டம் ஏற்படுத்துவதற்கு அரசு விரிவான திட்டங்களைத் தயார் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது செயல் படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விரிவான திட்ட அறிக்கை 24-12-1983 தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவருடைய ஒப்புதலும் ஒரு வாரத்திலே கிடைத்துவிடும் எனத் தெரியவருகிறது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியம் ஏற்படும்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு என்ன ? எத்தனை யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்படும் ? எத்தனை பகுதிகள் அதனால் பயன்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் உற்பத்தித் திறன் 20 மெகா வாட். 4.2 கோடி யூனிட்டுகள் இதன் மூலம் பெறப்படும். பொதுவாக அந்தப் பகுதியிலே அது பயன்படுத்தப்படும்.

[1984 மார்ச் 9

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தனூர் நீர் மின் திட்டம் விரிவான திட்டம் தயாராகி விரைவிலே ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பழனிக்கு அருகிலே சண்முகா நீர் மின் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று 2, 3 ஆண்டுகளாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு வந்தது. அதனுடைய வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதா ? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்.

233 (*வினா 18196)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 10—6—83 முடிய 127 நபர்களுக்கு தமிழ்நாடு மின் வாரியத்தில் தற்காலிகமாக வேலை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இப்படி நிலம் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பகுதியிலே உள்ள அந்த மக்களுக்கு தற்காலிகமாக வேலை கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மக்களுக்கு எந்த மாதிரியான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தகுதிக்கேற்ப வேலைகள் தரப்படுகின்றன. முதலில் தற்காலிகமாகத்தான் தருவார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS